2. ஒரு பகுதியில் உண்மையில் வசிப்பவர்களும் பெயர் நீக்கப் படவேண்டுமெனக் கருதுபவர்களுமான குடும்பங்களின் பெயர்களைக் காட்டும் தற்காலிகப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு, குறிப்பிட்ட கால அளவுக்குள் அதற்கான முறையீடுகளை அல்லது மறுப்புரை களைக் கோரி, அந்தப் பகுதியில் காட்டி வைக்கப்படுகிறது. இத் தகைய பட்டியல்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும், அந் தந்தப் பகுதி நகராட்சி உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்படு கின்றன. குறிப்பிட்ட காலத்திற்குள் மறுப்புரைகள் அல்லது முறை யீடுகள் வரப்பெற்றிருப்பின் அவை தகுதி அடிப்படையில் பரிசீலிக் கப்படுகின்றன.

கண்காணிப்புக் குழு.

பரிசீலனைக் குழு இவ்வாறு பரிசீலனை செய்தபோதிலும், சில அனுபோகதார்கள் அந்தப் பகுதியில் தொடக்கத்திலிருந்தே வசித்து வருபவர்கள் அல்லர் என்பதாகக் குடிசை வாழ்வோர் சிலரிடமிருந்தே புகார்கள் கிடைத்துள்ளன. இத்தகைய புகார்களும் ஏனைய இரகசிய விசாரணைகளும் கண்காணிப்புக் குழுவின்றால் கவனிக்கப்படுகின்றன. பொய்யான கோரிக்கைகளைக் கண்டுபிடித்து இரண்டாவது முறையில் அவற்றை நீக்கிவிடுவதற்காக இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்காணிப்புக் குழு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவரின் நேரடிப் பொறுப்பின்கீழ் செயல்படுகிறது. இவ்வாறு நீக்கல் முறை யாவற்றையும் பின்பற்றிய பிறகு, அந்தப் பகுதியில் உண்மையில் வசிக்கும் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையும், அவர்களது தொழில், வருமானம் முதலிய தேவையான விவரங் களும் பற்றிய முழுத்தகவல் வாரியத்திற்குக் கிடைத்துவிடும். இது முடிவாகத் தயாரிக்கப்பட்டதும், குடும்பப் புகைப்படத்துடனும், குடும்பத் திலுள்ளவர்களின் பெயர்கள் பற்றிய விவரங்களுடனும் அந்தப் பகுதியில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அட்டைப் புத்த கங்கள் வழங்கப்படுகின்றன.

மாற்று இடவசதியை ஏற்படுத்திக் கொடுத்தல்.

ஏற்கெனவே தெரிவித்துள்ளபடி, குடிசைவாழ் மக்களில் பலர் இதுவரையில் அவர்கள் வசித்து வருகிற அதே பகுதியில் வசிக்கவே விரும்புகின்றனர். ஆகவே, இத்தகைய குடிசைவாழ் மக்களுக்கு அருகிலுள்ள பகுதிகளில் தற்காலிகமாக இடமளித்து அதே பகுதியில் இவ்வாரியம் குடியிருப்புகளைக் கட்டவேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளா